கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2010/2011 (ஜனவரி/பெப்ரவரி 2013)

# ECOS 2103 Public Sector Economics

LIBRARY
EASTERN UNIV.
10 JUN 2013

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

01.(அ) பொதுத்துறைப் பொருளியலை எவ்வாறு வரையறுப்பீர்?
(05 புள்ளிகள்)

(ஆ) பொதுத்துறை தனியார் துறை என்பவற்றை வேறுபடுத்தும் காரணங்களைத் தருக.
(08 புள்ளிகள்)

(இ) அரசாங்கமொன்று பொதுப்பொருட்களை வழங்குவதற்கான நோக்கங்களை விளக்குக.
(12 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

02.(அ) சந்தைத்தோல்வி என்றால் என்ன?
(05 புள்ளிகள்)

(ஆ) சந்தைத்தோல்வி ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்களை விளக்குக.
(08 புள்ளிகள்)

(இ) அரசாங்கத் தலையீட்டுடனான சந்தைத்தோல்வி ஏற்றுக்கொள்ளத் தக்கதா? ஆராய்க.
(12 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

03.(அ) பொதுத் தெரிவு என்பதிலிருந்து நீர் கருதுவது யாது?
(05 புள்ளிகள்)

(ஆ) பொதுத் தெரிவை மேற்கொள்ளுஞ் சந்தர்ப்பங்களில் எதிர்நோக்கப்படும் பிரதான சவால்கள் எவை?
(08 புள்ளிகள்)

(இ) "பெறற்றோ உத்தமநிலை தத்துவம்" கூட்டுத் தெரிவைக் கையாள்வதில் வினைத்திறனுடையதா? ஆராய்க.
(12 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

04.(அ) அரசிறைக் கொள்கை என்றால் என்ன? (05 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் அண்மைக்கால அரசிறைக் கொள்கை மாற்றங்களைத் தருக. (08 புள்ளிகள்)

(இ) பற்றாக்குறை வரவு செலவுத் திட்டத்துக்குப் படுகடன் கேள்வி முகாமைத்துவம் தீர்வாகுமா? விளக்குக. (12 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

05.(அ) வெளிவாரிவிளைவுகளின் பொருளாதார முக்கியத்துவம் யாது? (05 புள்ளிகள்)

(ஆ) வெளிவாரி விளைவுகளுக்கும் இலவசப்பயணி தொடர்பான பிரச்சினைக்கும் இடையிலான தொடர்பு யாது? உதாரணங்களுடன் கருத்துரைக்குக. (08 புள்ளிகள்)

(இ) உற்பத்தி நடவடிக்கையின்போது எதிர்க்கணிய வெளிவாரிவிளைவுகள் காணப்பட்டால் அரசாங்கம் எவ்வாறு சரிப்படுத்தலை மேற்கொள்ளலாம்? உதாரணம் தந்து விளக்குக. (12 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

06.(அ) தனியார்மயமாக்கலின் பாதகமான பொருளாதார விளைவுகளைத் தருக? (05 புள்ளிகள்)

(ஆ) தனியார்மயமாக்கல் பொதுத்துறையின் சார்பளவு ரீதியான பங்களிப்பைக் குறைப்பதால் கூட்டு முயற்சி அடிப்படையிலான பொருளாதார அபிவிருத்திக்குப் பொருத்தமற்றதெனக் கருத முடியுமா? காரணங்களைத் தருக. (08 புள்ளிகள்)

(இ) இலங்கையின் அண்மைக்கால தனியார் மயமாக்கல் போக்குகளை மதிப்பிடுக. (12 புள்ளிகள்

(மொத்தம் 25 புள்ளிகள்

***